[1983 பிப்ரவரி 2

(பிற்பகல் 12–50)

3. அறிவிப்பு—தொடர்ச்சி.

(ஆ) தலைமைச் செயலாளரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. முதல்வர் அவர்களுக்கு ஒரு செய்தி தலைமைச் செயலாளரிடமிருந்து வந்திருக்கின்றது. எனவே அவர்கள் அவசரமாகப் போகவேண்டி இருப்பதால் அவர்களது உரையினை தற்போது இத்துடன் நிறுத்திக்கொண்டு பின்னர் நாளை மறுநாள் தொடருவார்கள்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 4–2–1983 காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12.51 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

129. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 6–10–1982 ஆம் தேதியிடப்பெற்ற உள்துறையின் 2513 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

130. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 21-10-1982 ஆம் தேதியிடப்பெற்ற உள்துறையின் 2658 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

131. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் 1980–81 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்), [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

TAMIL NADU LEGISLATURE LIBRARY
4 - OCT 1983
MADRAS-600 009

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

—எதுவுமில்லை—